# இரவில் ஓத வேண்டிய துஆக்கள்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

**அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு**

# இரவில் ஓத வேண்டியவை 1

நபி(ﷺ) அவர்கள் (மக்களை நோக்கி), "ஓர் இரவில் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் ஒருவரால் ஓத முடியாதா?" என்று கேட்டார்கள்.

"(ஒரே இரவில்) எவ்வாறு குர்ஆனின் மூன்றிலொரு பகுதியை ஓத இயலும்?" என்று மக்கள் கேட்டார்கள்.

நபி(ﷺ) அவர்கள் "குல் ஹுவல்லாஹு அஹத் (என்று தொடங்கும் 112 ஆவது அத்தியாயம்) குர்ஆனின் மூன்றிலொரு பங்கிற்கு ஈடானதாகும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபுதர்தா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1922

# இரவில் ஓத வேண்டியவை 2

'அல்பகரா' எனும் (இரண்டாவது) அத்தியாயத்தின் இறுதி இரண்டு (285 மற்றும் 286 வது) வசனங்களை இரவில் ஓதுகிறவருக்கு அந்த இரண்டுமே போதும்! என நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ மஸ்வூத்(ரலி) அவர்கள், புகாரி 5009

# இரவில் ஓத வேண்டியவை 3

'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருவதாக அவன் கூறினான். அதனால் அவனைவிட்டு விட்டேன்!' என்றேன்.

'அந்த வார்த்தைகள் என்ன? என்று நபி(ﷺ) அவர்கள் கேட்டார்கள்.

'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸியை ஆரம்பம் முதல் கடைசிவரை ஓதும்! அவ்வாறு ஓதினால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்! என்று என்னிடம் அவன் கூறினான் எனத் தெரிவித்தேன்.

நபித்தோழர்கள் நன்மையான(தைக் கற்றுக் கொண்டு செயல்படுத்துவதில் அதிக ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். அப்போது நபி(ﷺ) அவர்கள் 'அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் அவன் உம்மிடம் உண்மையைத் தான் சொல்லியிருக்கிறான்! மூன்று இரவுகளாக நீர் யாரிடம் பேசி வருகிறீர் என்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டனர். 'தெரியாது' என்றேன். 'அவன்தான் ஷைத்தான்!' என்று இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 2311
(ஹதீஸின் ஒரு பகுதி)

# இரவில் ஓத வேண்டியவை 4

நபி(ﷺ) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து, அதில் குல் ஹுவல்லாஹு அஹத்', குல் அஊது பிரப்பில் ஃபலக்', குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114 வது) அத்தியாயங்களை ஓதி ஊதிக் கொள்வார்கள்.

பிறகு தம் இரு கைகளால் (அவை எட்டும் அளவுக்கு) தமது உடலில் இயன்ற வரையில் தடவிக்கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக்கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 5017

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# இரவில் ஓத வேண்டியவை 5

## வீட்டிற்குள் நுழையும் போதும், சாப்பிடும் போதும் பிஸ்மில்லாஹ் எனக் கூறுவது

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும்போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை, உண்ண உணவுமில்லை" என்று கூறுகிறான்.

ஒருவர் இல்லத்திற்குள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவு கூராவிட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடம் கிடைத்துவிட்டது" என்று சொல்கிறான்.

அவர் உணவு உண்ணும்போது அல்லாஹ்வின் பெயர் கூறாவிட்டால் ஷைத்தான் "இன்றைய இரவில் நீங்கள் தங்கும் இடத்தையும் உணவையும் அடைந்து கொண்டீர்கள்" என்று சொல்கிறான்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் முஸ்லிம் 4106

# இரவில் ஓத வேண்டியவை 6-A

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

سُبْحَانَ اللهِ (٣٣)

الْحَمْدُ لِلّٰهِ (٣٣)

اللهُ أَكْبَرُ (٣٤)

சுப்ஹானல்லாஹ் (33 முறை)

அல்ஹம்துலில்லாஹ் (33 முறை)

அல்லாஹு அக்பர் (34 முறை)

அல்லாஹ் தூயவன்.

அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்.

அல்லாஹ் மிகப்பெரியவன்.

அறிவிப்பாளர்: அலீ பின் அபீதாலிப்( ரலி) அவர்கள்,புகாரி 6318

# இரவில் ஓத வேண்டியவை 6-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் சொல்வதன் சிறப்பு

(என் துணைவியார்) ஃபாத்திமா(ரலி) அவர்கள் (மாவு அரைக்கும்) திரிகை சுற்றியதால் தம் கையில் ஏற்பட்ட காய்ப்பு குறித்து (என்னிடம்) முறையிட்டார்.

இது தொடர்பாக நபியவர்களிடம் தெரிவிக்கும்படி கூறினேன். எனவே, ஒரு பணியாளரை (தமக்குத் தரும்படி) கேட்க நபி(ஸல்) அவர்களிடம் ஃபாத்திமா சென்றார்கள். ஆனால் நபி(ஸல்) அவர்கள் அப்போது வீட்டில் இல்லாததால் ஆயிஷா(ரலி) அவர்களிடம் அது பற்றிக் கூறி(விட்டுத் திரும்பலா)னார்கள்.

நபி(ஸல்) அவர்கள் வந்தவுடன் அவர்களிடம் ஆயிஷா(ரலி) அவர்கள் விஷயத்தை தெரிவித்தார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள்.

அப்போது நாங்கள் படுக்கைக்குச் சென்று விட்டிருந்தோம். (அவர்களைக் கண்டவுடன்) நான் எழுந்திருக்க முற்பட்டேன். உடனே நபி(ஸல்) அவர்கள், '(எழுந்திருக்க வேண்டாம்) அந்த இடத்திலேயே இருங்கள்' என்று கூறிவிட்டு எங்களுக்கு நடுவில் வந்து அமர்ந்தார்கள்.

அப்போது (என்னைத் தொட்டுக் கொண்டிருந்த) அவர்களின் பாதங்களின் குளிர்ச்சியை என்னுடைய நெஞ்சின் மீது உணர்ந்தேன். (அந்த அளவுக்கு நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள்.

'பணியாளரை விட உங்கள் இருவருக்கும் (பயனளிக்கும்) சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? நீங்கள் இருவரும் 'படுக்கைக்குச் சென்றதும்' அல்லது 'விரிப்புக்குச் சென்றதும்' அல்லாஹு அக்பர் (அல்லாஹ் பெரியவன்) என்று முப்பத்து நான்கு முறையும், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) என்று முப்பத்து மூன்று முறையும், அல்ஹம்துலில்லாஹ் (புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே) என்று முப்பத்து மூன்று முறையும் சொல்லுங்கள். இது பணியாளைவிட உங்கள் இருவருக்கும் சிறந்ததாகும். என்றார்கள்.

**அறிவிப்பாளர்: அலீ பின் அபீதாலிப்( ரலி) அவர்கள்,புகாரி 6318**

# இரவில் ஓத வேண்டியவை 7

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆ

اللَّهُمَّ بِاسْمِكَ أَمُوتُ وَأَحْيَا

அல்லாஹும்ம பிஸ்மிக அமூ(த்)து வஅஹ்யா

**இறைவா! உன் பெயர் கூறியே இறக்கிறேன்; உயிர் வாழவும் செய்கிறேன்.**

நபி(ﷺ) அவர்கள் இரவில் படுக்கைக்கு உறங்கச் சென்ற பின்னால் தம் (வலக்) கையைத் தம் (வலக்) கன்னத்திற்குக் கீழே வைத்துக் கொள்வார்கள். பிறகு, 'அல்லாஹும்ம பிஸ்மி(க்)க அமூ(த்)து வ அஹ்யா' என்று கூறுவார்கள்.

உறக்கத்திலிருந்து எழும்போது ம்போது 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஅத மா அமாத்தனா வஇலைஹிந் நுஷூர்' என்று கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: ஹுதைஃபா (ரலி) அவர்கள்,புகாரி 6314

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆ

اَللّٰهُمَّ قِنِىۡ عَذَابَكَ يَوۡمَ تَبۡعَثُ عِبَادَكَ

**அல்லாஹும்ம கினீ அதாபக**

**யவ்ம தப்அஸு இபாதக**

யா அல்லாஹ்! உனது தண்டனையில் இருந்து

என்னைக் காப்பாற்றிடுவாயாக,

உன் அடியார்களை எல்லாம் எழுப்பி ஒன்று

திரட்டும் நாளில்

அறிவிப்பாளர்: பராஃ இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள்,அபூதாவுத் 5047

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# இரவில் ஓத வேண்டியவை 9

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ أَطْعَمَنَا وَسَقَانَا، وَكَفَانَا وَآوَانَا، فَكَمْ مِمَّنْ لاَ كَافِيَ لَهُ وَلاَ مُؤْوِيَ.

அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அம(ط)னா, வஸகானா, வகபா(ف)னா, வஆவானா, ப(ف)கம் மிம்மல் லா காபி(ف)ய லஹூ வலா முஃவிய

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது ! அவனே நமக்கு உணவளித்தான், குடிநீர் வழங்கினான், (நம் தேவைகளை நிறைவேற்றி) போதுமான அளவுக்குக் கொடுத்தான், (தங்க இடமளித்து) தஞ்சமளித்தான். ஆனால், போதுமாக்கி வைப்பதற்கோ தஞ்சமளிப்பதற்கோ ஆளில்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 52

# இரவில் ஓத வேண்டியவை 10

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் தூங்கும் போது ஓத வேண்டிய துஆ

بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي وَبِكَ أَرْفَعُهُ إِنْ أَمْسَكْتَ نَفْسِي فَارْحَمْهَا وَإِنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا تَحْفَظُ بِهِ عِبَادَكَ الصَّالِحِينَ

பிஸ்மிக ரப்பி வல(ض)ஃது ஜன்பீ வபிக அர்ப(ف)உஹு இன் அம்ஸக்த நப்(ف)ஸீ ப(ف)ர்ஹம்ஹா வஇன் அர்ஸல்தஹா ப(ف)ஹ்ப(ف)ழ்(ظ)ஹா பிமா தஹ்ப(ف)ழு(ظ) பிஹி இபாதகஸ் ஸா(ص)லிஹீன

என் அதிபதியே! உன் பெயரால் என் விலாவை (தரையில்) வைத்தேன். உன் உதவியாலேயே (மீண்டும்) எழுவேன்.

என் உயிரை நீ கைப்பற்றிக் கொண்டால், அதற்கு நீ கருணை புரிவாயாக ! அதை நீ (கைப்பற்றாமல்) விட் டு விட்டால், உன் நல்லடியார்களை எதன் மூலம் பாதுகாப்பாயோ அதன் மூலம் என் உயிரையும் காத்திடுவாயாக!

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள் புகாரி 6320

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை 11-A

**அபூபக்கர்(ரலி) அவர்கள் காலையிலும், மாலையிலும், ஓதுவதற்கு ஒரு பிரார்த்தனையைக் கற்றுத்தருமாறு கேட்ட போது நபியவர்கள் காலையிலும், மாலையிலும், இரவிலும் ஓதுவதற்கு இந்தப் பிரார்த்தனையைக் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்**

اَللّٰهُمَّ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَاطِرَ
السَّمٰوَاتِ وَالأَرْضِ رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيكَهُ،
أَشْهَدُ أَنْ لَاۤ إِلٰهَ إِلَّا أَنْتَ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ
نَفْسِي وَمِنْ شَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ، وَأَنْ
أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوءًا أَوْ أَجُرَّهُ إِلَى مُسْلِمٍ

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். திர்மிதீ 2392, அபூதாவுத் 5069

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை 11-A

**அபூபக்கர்(ரலி) அவர்கள் காலையிலும், மாலையிலும், ஓதுவதற்கு ஒரு பிரார்த்தனையைக் கற்றுத்தருமாறு கேட்ட போது நபியவர்கள் காலையிலும், மாலையிலும், இரவிலும் ஓதுவதற்கு இந்தப் பிரார்த்தனையைக் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்**

அல்லாஹும்ம ஆலிமல் கை(غ)பி
வஷ்ஷஹாததி பா(ف)தி(ط)ரஸ் ஸமாவாதி வல்
அர்ழி(ض) ரப்ப குல்லி ஷைய்இன் வமலீகஹு
அஷ்ஹது அல் லாஇலாஹ இல்லா அன்த,
அஊது பிக மின் ஷர்ரி நப்(ف)ஸீ வமின் ஷர்ரிஷ்
ஷை(த்)தா(ط)னி வஷிர்கிஹி வஅன்
அக்தரிப(ف) அலா நப்(ف)ஸீ ஸூஅன் அவ்
அஜுர்ரஹு இலா முஸ்லிமின்

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். திர்மிதீ 2392, அபூதாவுத் 5069

# இரவில் ஓத வேண்டியவை 11-C

**அபூபக்கர்(ரலி) அவர்கள் காலையிலும், மாலையிலும், ஓதுவதற்கு ஒரு பிரார்த்தனையைக் கற்றுத்தருமாறு கேட்ட போது நபியவர்கள் காலையிலும், மாலையிலும், இரவிலும் ஓதுவதற்கு இந்தப் பிரார்த்தனையைக் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்**

மறைவானவை, மறைவில்லாதவை யாவையும் அறிந்த நாயனே! வானங்கள் மற்றும் பூமியைப் படைத்தவனே! ஒவ்வொரு பொருளின் இரட்சகன். மற்றும் அவற்றின் உரிமையாளன். வணங்கப்படுபவன் உன்னையன்றி வேறு கடவுள் இல்லை என நான் சாட்சி கூறுகின்றேன். என் மனதின் தீமையிலிருந்து, ஷைத்தானின் தீமை மற்றும் அவன் கூட்டாகுதல் ஆகியவற்றிலிருந்து, இன்னும் எனக்கே நான் தீமை செய்வதிலிருந்து அல்லது எந்த ஒரு முஸ்லிமுக்காவது நான் அதை இழுத்துச் செல்லுதலிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். திர்மிதீ 2392, அபூதாவுத் 5069

# இரவில் ஓத வேண்டியவை 12-A

ஜமிய்யா அத்தஃவா வல் இர்ஷாத் — جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் தூங்கச் செல்லும் முன்பு ஓத வேண்டிய துஆ

اللَّهُمَّ رَبَّ السَّمَوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ الْعَرْشِ الْعَظِيمِ رَبَّنَا وَرَبَّ كُلِّ شَيْءٍ فَالِقَ الْحَبِّ وَالنَّوَى وَمُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ وَالْفُرْقَانِ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ كُلِّ شَيْءٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ اللَّهُمَّ أَنْتَ الأَوَّلُ فَلَيْسَ قَبْلَكَ شَيْءٌ وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ بَعْدَكَ شَيْءٌ وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ شَيْءٌ وَأَنْتَ الْبَاطِنُ فَلَيْسَ دُونَكَ شَيْءٌ اقْضِ عَنَّا الدَّيْنَ وَأَغْنِنَا مِنَ الْفَقْرِ

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 7064

# இரவில் ஓத வேண்டியவை 12-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் தூங்கச் செல்லும் முன்பு ஓத வேண்டிய துஆ

அல்லாஹும்ம ரப்பஸ் ஸமாவாதி வரப்பல் அர்ழி(ض) வரப்பல் அர்ஷில் அழீ(ظ)ம். ரப்பனா வரப்ப குல்லி ஷய்இன் ப(ف)ாலிகல் ஹப்பி வந்நவா, வமுன்ஸி(ز)லத் தவ்ராதி வல் இன்ஜீலி வல் பு(ف)ர்கானி அஊதுபிக மின் ஷர்ரி குல்லி ஷய்இன் அன்த ஆஹிதும் பினாஸி(ص)யதிஹி, அல்லாஹும்ம அன்தல் அவ்வலு ப(ف)லைஸ கப்லக ஷய்உன், வஅன்தல் ஆகி(خ)ரு ப(ف)லைஸ பஃதக ஷய்உன், வஅன்தழ் ழா(ظ)ஹிரு ப(ف)லைஸ ப(ف)வ்கக ஷய்உன், வஅன்தல் பாதி(ط)னு ப(ف)லைஸ தூனக ஷய்உன், இக்ழி(ض) அன்னத் தைன வஅக்(غ)னினா மினல் ப(ف)க்ரி

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 7064

# இரவில் ஓத வேண்டியவை 12-C

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

## இரவில் தூங்கச் செல்லும் முன்பு ஓத வேண்டிய துஆ

இறைவா! வானங்களின் அதிபதியே! பூமியின் அதிபதியே! மகத்தான அரியணையின் அதிபதியே! எங்கள் இறைவா! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! விதைகளையும், கொட்டைகளையும் வெடித்து முளைக்கச் செய்பவனே! தவ்ராத், இன்ஜீல், ஃபுர்கான் (குர்ஆன்) ஆகிய வேதங்களை அருளியவனே! அனைத்துப் பொருட்களின் தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். அவற்றின் முன்நெற்றி ரோமங்களை நீயே பிடித்துள்ளாய். இறைவா! நீயே ஆரம்பமானவன்; உனக்கு முன்னர் வேறெதுவும் இல்லை. நீயே இறுதியானவன்; உனக்குப் பின்னர் வேறெதுவும் இல்லை. நீயே மேலானவன்; உனக்கு மேலே வேறொன்றுமில்லை. நீயே அந்தரங்கமானவன்; உன்னை விட (மறைவானது) எதுவும் இல்லை. எங்கள் கடன்களை நிறைவேற்றி வைப்பாயாக! வறுமையிலிருந்து காத்து எங்களைத் தன்னிறைவு கொள்ளச்செய்வாயாக!)

**அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 7064**

# இரவில் ஓத வேண்டியவை 13-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ أَسْلَمْتُ نَفْسِي إِلَيْكَ وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ رَهْبَةً وَرَغْبَةً إِلَيْكَ لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ

அல்லாஹும்ம அஸ்லம்து நப்(ف)ஸீ இலைக, வப(ف)வ்வழ்(ض)து அம்ரீ இலைக, வஅல்ஜஃது ழு(ظ)ஹ்ரீ இலைக, ரஹ்பதன் வரக்(غ)பதன் இலைக, லா மல்ஜஅ வலாமன்ஜா மின்க இல்லா இலைக, ஆமன்து பிகிதாபிகல் லதீ அன்ஸ(ز)ல்த, வபிநபிய்யிகல்லதீ அர்ஸல்த

அறிவிப்பாளர்: பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அவர்கள், புகாரி 6311

# இரவில் ஓத வேண்டியவை 13-B

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

இறைவா! உனக்கு நான் கீழ்ப்படிந்தேன். காரியம் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்தேன். என் விவகாரங்கள் அனைத்திலும் உன்னையே சார்ந்திருக்கிறேன். உன் மீதுள்ள ஆவலிலும் அச்சத்திலும் தான் (இவற்றை செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடமில்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும், நீ அனுப்பி வைத்த உன்னுடைய நபியையும் நான் நம்பினேன்.

## சிறப்பு

நீ உன் படுக்கைக்குச் செல்லும்போது தொழுகைக்காக அங்கசுத்தி (உளூ) செய்வது போன்று அங்கசுத்தி செய்துகொள்வாயாக. பிறகு உன் வலப்பக்கத்தின் மீது சாய்ந்து படுத்து. பிறகு, 'இறைவா! உனக்கு நான் கீழ்ப்படிந்தேன். காரியம் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்தேன். என் விவகாரங்கள் அனைத்திலும் உன்னையே சார்ந்திருக்கிறேன். உன் மீதுள்ள ஆவலிலும் அச்சத்திலும் தான் (இவற்றை செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடமில்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும், நீ அனுப்பி வைத்த உன்னுடைய நபியையும் நான் நம்பினேன்.' (இவ்வாறு நீ பிரார்த்தனை செய்துவிட்டு உறங்கி அன்றைய இரவில் நீ இறந்துவிட்டால் (இஸ்லாம் எனும்) இயற்கை மரபில் இறந்தவனாவாய். இந்தப் பிரார்த்தனையை (இரவின்) இறுதிப்பேச்சாக ஆக்கிக் கொள்வாயாக !

அறிவிப்பாளர்: பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அவர்கள், புகாரி 6311

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# இரவில் ஓத வேண்டியவை 14-A

## இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ

وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ الْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللهِ،

وَلاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَاللَّهُ أَكْبَرُ ، وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللَّهِ

اللَّهُمَّ اغْفِرْ لِي

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்.

அல்ஹம்துலில்லாஹி, வஸுப்ஹானல்லாஹி,

வலா இலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர்,

வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி,

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ.

அறிவிப்பாளர்: உபதா இப்னு ஸாமித்(ரலி) அவர்கள், புகாரி 1154

# இரவில் ஓத வேண்டியவை 14-B

## இரவில் எதிர்பாராத விதமாக விழித்தவர் ஓத வேண்டியது

யார் இரவில் விழித்து "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. அவன் ஏகன், அவனுக்கு நிகரானவர் இல்லை, ஆட்சியும் அவனுக்குரியது, புகழும் அவனுக்குரியது, அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுள்ளவன்.

அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் தூயவன், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் மிகப்பெரியவன் நன்மை செய்யும் ஆற்றலும் தீமையில் இருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே இருக்கிறது என்று கூறிவிட்டு இறைவா! என்னை மன்னித்துவிடு என்றோ, வேறு பிரார்த்தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். உளுச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப்படும்.

அறிவிப்பாளர்: உபதா இப்னு ஸாமித்(ரலி) அவர்கள், புகாரி 1154

# இரவில் ஓத வேண்டியவை 15-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## இரவில் கெட்ட கனவு கண்டால் கூற வேண்டியவை

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அஊது பில்லாஹி மினஷ் ஷை(த்)தா(ط)னிர் ரஜீம்

விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

உங்களில் எவரேனும் தாம் விரும்பாத தீய கனவு கண்டால் உடனே அவர் தம் இடப் பக்கத்தில் துப்பட்டும். ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பும் கோரட்டும். அப்போது அவருக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திட இயலாது.

அறிவிப்பாளர்: அபூ கத்தாதா(ரலி) அவர்கள், புகாரி 7005

# இரவில் ஓத வேண்டியவை 15-B

## இரவில் கெட்ட கனவு கண்டால் கூற வேண்டியவை

أَعُوذُ بِاللهِ مِنْهُ

அஊது பில்லாஹி மின்ஹு

**அந்தத் தீய கனவை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.**

உங்களில் எவரேனும் தாம் விரும்பாத தீய கனவு கண்டால் உடனே அவர் தம் இடப் பக்கத்தில் துப்பட்டும். ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பும் கோரட்டும். அப்போது அவருக்கு அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்திட இயலாது.

அறிவிப்பாளர்: அபூ கத்தாதா(ரலி) அவர்கள், புகாரி 7005

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை 15-C

## இரவில் கெட்ட கனவு கண்டால் கூற வேண்டியவை

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ مِنْ غَضَبِهِ وَعِقَابِهِ وَشَرِّ عِبَادِهِ وَمِنْ هَمَزَاتِ الشَّيَاطِينِ وَأَنْ يَحْضُرُونِ

அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மதி மின் க(غ)ழ(ض)பிஹி வஇகாபிஹி வஷர்ரி இபாதிஹி வமின் ஹமஸா(ز)திஷ் ஷயாதீ(ط)னி வஅன்ய் யஹ்ழு(ض)ரூன்.

அல்லாஹ்வின் பரிபூரண வார்த்தைகளைக் கொண்டு அவனது கோபத்தை விட்டும், அவனது தண்டனையை விட்டும், அவனது அடியார்களின் தீங்கை விட்டும், ஷைத்தான்களின் ஊசலாட்டங்களை விட்டும், அவர்கள் என்னிடம் வருவதை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன், எனக் கூறினால் அந்தக் கனவு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள்,அபூதாவுத் 3893

# இரவில் ஓத வேண்டியவை 16

## இரவில் தூக்கத்திலிருந்து விழித்துவுடன் ஓத வேண்டிய துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِي أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا، وَإِلَيْهِ النُّشُورُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாதனா வஇலைஹிந் நுஷூர்

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும்,(மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் இரவில் உறக்கத்திலிருந்து எழும்போது 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமாதனா வஇலைஹிந் நுஷூர்' என்று கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: ஹுதைஃபா இப்னு அல்யமான்(ரலி) அவர்கள், புகாரி 6314

# இரவில் ஓத வேண்டியவை 17

## நபி(ﷺ) அவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்து பல்துலக்கி உளூச் செய்தவுடன் ஓதியவை

நபி(ﷺ) அவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்து பல் துலக்கி உளூச் செய்து

**ஆலு இம்ரான் அத்தியாயத்தின் இன்ன ஃபீ ஹல்கிஸ் ஸமாவாத்தி முதல் இறுதி வரை (190 முதல் 200 வரை உள்ள வசனங்களை)**

ஓதினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 763

# இரவில் ஓத வேண்டியவை 18-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## நபி(ﷺ) அவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

اللَّهُمَّ لَكَ الحَمْدُ أَنْتَ نُورُ السَّمَوَاتِ وَالأَرْضِ ، وَلَكَ الحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالأَرْضِ ، وَلَكَ الحَمْدُ أَنْتَ رَبُّ السَّمَوَاتِ وَالأَرْضِ وَمَنْ فِيهِنَّ ، أَنْتَ الحَقُّ ، وَوَعْدُكَ الحَقُّ ، وَقَوْلُكَ الحَقُّ ، وَلِقَاؤُكَ الحَقُّ ، وَالجَنَّةُ حَقٌّ ، وَالنَّارُ حَقٌّ ، وَالنَّبِيُّونَ حَقٌّ ، وَالسَّاعَةُ حَقٌّ ،

اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ ، وَبِكَ آمَنْتُ ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ ، وَإِلَيْكَ أَنَبْتُ ، وَبِكَ خَاصَمْتُ ، وَإِلَيْكَ حَاكَمْتُ ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ ، أَنْتَ إِلَهِي لَا إِلَهَ إِلَّا أَنْت

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1758

# இரவில் ஓத வேண்டியவை 18-B

## நபி(ﷺ) அவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

அல்லாஹும்ம லகல் ஹம்து அன்த நூருஸ் ஸமாவாதி வல் அர்ழி(ض), வலகல் ஹம்து அன்த கய்யிமுஸ் ஸமாவாதி வல் அர்ழி(ض), வலகல் ஹம்து அன்த ரப்புஸ் ஸமாவாதி வல் அர்ழி(ض) வமன் பீ(ف)ஹின்ன, அன்தல் ஹக்கு, வவஃதுகல் ஹக்கு, வகவ்லுகல் ஹக்கு, வலிகாஉகல் ஹக்கு, வலஜன்னது ஹக்குன், வந்நாரு ஹக்குன், வந்நபிய்யூன ஹக்குன், வஸ்ஸாஅது ஹக்குன்

அல்லாஹும்ம லக அஸ்லம்து, வபிக ஆமன்து, வஅலைக தவக்கல்து, வஇலைக அனப்து, வபிக கா(خ)ஸ(ص)ம்து, வஇலைக ஹாகம்து, ப(ف)க்(غ)பி(ف)ர்லீ மா கத்தம்து வமா அக்(خ)கர்து, வமா அஸ்ரர்து, வமா அஃலன்து, அன்த இலாஹீ லா இலாஹ இல்லா அன்த.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1758

# இரவில் ஓத வேண்டியவை 18-C

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## நபி(ﷺ) அவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழ எழுந்தால் ஓதும் துஆ

இறைவா! உனக்கே புகழ் அனைத்தும்! வானங்கள் மற்றும் பூமியின் ஒளி நீயே! உனக்கே புகழ் அனைத்தும்! வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றை நிர்வகிப்பவன் நீயே! உனக்கே புகழ் அனைத்தும்! வானங்கள், பூமி மற்றும் அவற்றிலுள்ளவற்றின் இறைவன் நீயே! நீ உண்மையே! உன் வாக்குறுதி உண்மையே! உனது கூற்று உண்மையே! உன் தரிசனம் உண்மை! சொர்க்கம் உண்மை! நரகம் உண்மை! மறுமை நாள் உண்மை! அல்லாஹ்வே! உனக்கே கட்டுப்பட்டேன். உன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமே திரும்புகிறேன். உன்னிடமே வழக்காடுவேன். உன்னிடமே நீதி கேட்பேன். எனவே, நான் முந்திச் செய்த, பிந்திச் செய்கிற, இரகசியமாகச் செய்த, பகிரங்கமாகச் செய்த பாவங்களை மன்னிப்பாயாக ! நீயே என் இறைவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை !

குறிப்பு: இந்த துஆவை தஹஜ்ஜுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் நபி(ﷺ) அவர்கள் ஓதுவதாக அபூ உவானா என்ற நூலில் ஒரு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1758

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# இரவில் ஓத வேண்டியவை 19-A

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ
السَّمَوَاتِ وَالأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ
تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ اهْدِنِي
لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ تَهْدِي مَنْ
تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847

# இரவில் ஓத வேண்டியவை 19-B

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல, வமீகாயீல, வஇஸ்ராபீ(ف)ல, பா(ف)திரஸ் ஸமாவா(த்)தி வல் அர்ழி(ض) ஆலிமல் க(خ)ய்பி வஷ்ஷஹாததி அன்த தஹ்குமு பைன இபாதிக பீ(ف)மா கானு பீ(ف)ஹி யக்(خ)தலீபூ(ف)ன, இஹ்தினீ லிமக்(خ)துலிப(ف) பீ(ف)ஹி மினல் ஹக்கி பிஇத்னிக இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா ஸி(ص)ராதிம் முஸ்தகீம்

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847

# இரவில் ஓத வேண்டியவை 19-C

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய். (பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

குறிப்பு: அபூ ஸலாம் இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபியவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்தால் எதைக் கொண்டு இரவுத் தொழுகையை ஆரம்பிப்பார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த துஆவைக் கொண்டு என பதிலளித்தார்கள்.

**அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள் முஸ்லிம் 1847**

# இரவில் ஓத வேண்டியவை 20

## நபி(ﷺ) அவர்கள் இரவுத் தொழுகையின் ஸுஜூதில் ஓதிய துஆ

اللَّهُمَّ أَعُوذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ وَأَعُوذُ بِكَ مِنْكَ لاَ أُحْصِي ثَنَاءً عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

அல்லாஹும்ம அஊது பிரிளா(ض)க மின் ஸக(خ)தி(ط)க, வபிமுஆ(ف)பாதிக மின் உகூபதிக, வஊது பிக மின்க லா உஹ்ஸி(ص) ஸ(ث)னாஅன் அலைக அன்த கமா அஸ்(ث)னைத அலா நப்(ف)ஸிக

யா அல்லாஹ் உனது திருப்பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும், உன்னைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று உன்னை முழுமையாகப் புகழ என்னால் முடியாது (அதற்கு நான் சக்தி பெற மாட்டேன்).

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1118

# இரவில் ஓத வேண்டியவை 21

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

**நபி(ﷺ) அவர்கள் பயணத்தில் ஸஹர் நேரத்தை அடைந்தால் இவ்வாறு ஓதுவார்கள்**

سَمَّعَ سَامِعٌ بِحَمْدِ اللَّهِ وَحُسْنِ بَلاَئِهِ عَلَيْنَا رَبَّنَا صَاحِبْنَا وَأَفْضِلْ عَلَيْنَا عَائِذًا بِاللَّهِ مِنَ النَّارِ

ஸம்மஅ ஸாமிஉன் பிஹம்தில்லாஹி, வஹுஸ்னி பலாஇஹி அலைனா, ரப்பனா ஸா(ص)ஹிப்னா வஅப(ف)ழி(ض)ல் அலைனா ஆஇதன் பில்லாஹி மினன் நாரி

அல்லாஹ் நமக்குப் புரிந்த நல் உபகாரத்திற்காக அவனை நாம் போற்றிப் புகழ்வதைக் கேட்பவர் கேட்டுவிட்டார். (அல்லது கேட்பவர் பிறருக்கு எடுத்துரைக்கட்டும்.) எங்கள் இரட்சகா! எங்களுடன் வருவாயாக! எங்கள்மீது கருணை பொழிவாயாக! நரக நெருப்பிலிருந்து காப்பாயாக!

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 7075

جمعية الـدعوة والإرشـاد وتوعية الجاليـات بالخبـر

# இரவில் ஓத வேண்டியவை

22-A

## ப(ف)ஜ்ர் தொழுகைக்கு மஸ்ஜிதுக்கு செல்லும் போது ஓதும் துஆ

اللَّهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا وَفِي بَصَرِي نُورًا وَفِي سَمْعِي نُورًا وَعَنْ يَمِينِي نُورًا وَعَنْ يَسَارِي نُورًا وَفَوْقِي نُورًا وَتَحْتِي نُورًا وَأَمَامِي نُورًا وَخَلْفِي نُورًا وَاجْعَلْ لِي نُورًا

அல்லாஹும்மஜ்அல் பீ(ف) கல்பீ நூரா, வபீ(ف) பஸ(ص)ரீ நூரா, வபீ(ف) ஸம்ஈ நூரா, வஅன்ய் யமீனீ நூரா, வஅன்ய் யஸாரீ நூரா, வப(ف)வ்கீ நூரா, வதஹ்தீ நூரா, வஅமாமீ நூரா, வக(خ)ல்பீ(ف) நூரா, வஜ்அல்லீ நூரா

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6316

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இரவில் ஓத வேண்டியவை

22-B

## ப(ஃ)ஜ்ர் தொழுகைக்கு மஸ்ஜிதுக்கு செல்லும் போது ஓதும் துஆ

இறைவா! என் இதயத்தில் ஒளியை ஏற்படுத்துவாயாக!

என் பார்வையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

என் செவியிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

என் வலப் பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

என் இடப்பக்கத்திலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

எனக்கு மேலேயும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

எனக்கு முன்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

எனக்குப் பின்னாலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

எனக்கு எல்லாத் திசையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக!

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6316